12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்
அருளியது

*அன்புச் சேவுக! - தொகுப்பு 3*

# அருளுலகப் பயிற்சி முயற்சி தேர்ச்சி முறை விளக்கம்



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 ஆடி மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

## அன்புள்ள சேவுக!

சென்ற மாத இதழ் போல இந்த இதழிலும் குருதேவர் தனது தலைமை மாணாக்கர் திரு நெ.சேவுகனுக்கு எழுதிய அஞ்சல்களில் குருதேவர் அறிக்கையில் அச்சான அஞ்சல் கட்டுரைகளின் தொகுப்பு வெளியாகின்றது. குருதேவர் அறிக்கை 29 முதல் 37 வரை உள்ள அறிக்கைகளில் வெளியாகிய 'அன்புச் சேவுக!' அஞ்சல் வடிவக் கட்டுரைகள் இந்த வெளியீட்டில் உள்ளன.

## இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில

1. இந்து வேதம் தமிழில்தான் இருக்கின்றது.
2. இந்து வேத நாடான இந்தியாதான் தமிழ்நாடு.
3. 'இந்தியா' என்று வடஇமயம் முதல் தென்குமரி வரை உள்ள பெருநிலப் பரப்பிற்கு பெயர் வைத்தவர்கள் தமிழர்கள்தான்.
4. இந்தியா, இந்து மதம், இந்து வேதம், இந்து, இந்துக்கள், இந்து வேதியர், இந்துக் கலாச்சாரம் (இந்து + கலை + ஆன்மீக + சாரம்).... முதலிய சொற்கள் அனைத்தும் செந்தமிழ்ச் சொற்களே.
5. வடஇமயத்தின் முடி முதல் தென்கோடிக் கடற்கரை மணல் பரப்பு வரை உள்ள அனைத்து வகைப்பட்ட கடவுள்களுக்கும் தமிழ்மொழி மட்டும்தான் தெரியும்.

.........

**[குருதேவர் அறிக்கை: 29]**

**<u>அன்புள்ள சேவுகனுக்கு...!</u>**

# <u>அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் சாதனை!</u>

அன்புச் சேவுக!

பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகின்ற பொழுது மட்டுமே; அவர்களால், கல்லும் புல்லும்; அதாவது, அனைத்து வகையான உயிரற்ற பொருள்களும், உயிரினங்களும் கடவுளாக்கப்படும் அருட்பணி நிகழுகின்றது. எனவேதான், அனைத்தையும், அனைவரையும் அருளூற்றுக்களாக மாற்றும் அமாவாசை வேள்வி [கந்தழி நிலை = சூரிய வழிபாடு]; மூன்றும் பிறைத் தொழுகை [கொடி நிலை = விண்மீன், கோள் வழிபாடு]; பருவ பூசை [வள்ளி நிலை = திங்கள் (நிலவு, சந்திரன்) வழிபாடு] என்ற மூன்றும் அருட்பணி விரிவாக்கத் திட்டங்களாகின்றன.

ஆண்டுக்கு ஒருமுறை கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் ஆகிய நான்கிலும் அந்தந்த யுகத்துக்குரிய மாதங்களில்; '<u>ஞானம் வழங்கு பால்குடப் பருவ பூசைத் திருவிழா</u>' கொண்டாடும் திட்டம் செயலாக்கப்படுகிறது; இதன் மூலம் அனைத்து வகையான தர, திர தீர, வீர, உர..... மக்களும் ஒரு முறையாவது அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுத் தெய்வீக இன்பம் துய்க்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. அதனல் அக இருளும், புற இருளும் அகன்று; சாதாரணப் பொதுமக்களும் அருளாளர்களாக மாறும் முயற்சியில் ஆர்வம் கொள்ளும் நிலைகள் உருவாக்கப்படுகின்றன.

மனித வாழ்வு ஏக்கத்திலும், துக்கத்திலும், தூக்கத்திலும், வெறியிலும், அற்பப் பொருளுலக ஆசைகளிலும் வீணுவதைத் தடுக்கும் முயற்சியே

ஞானம் வழங்கு பால்குடப் பருவ பூசைத் திருவிழா. இந்த அமுத ஆண்டு வைகாசித் திங்கள் 9-ஆம் நாள் [23-5-86 வெள்ளிக்கிழமை] நிகழ்ந்த ஞானம் வழங்கு பால்குடப் பருவ பூசைத் திருவிழாவில் நூற்றுக்கணக்கில் திருக்குடங்களுடன் உலா வந்தவர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் அருளூற்றுக்களாகவே மாறினார்கள். இவர்கள் மெய் மறந்து அருளுலக இன்ப வெள்ளத்தில் சிறு துரும்பு போல் அலைமோதி துள்ளி ஆடினார்கள். இவர்கள், தங்கள் தலையிலிருந்த திருக்குடத்தை இறக்கிப் பொருளுலகுக்குத் திரும்ப மறுத்துக் குதித்து ஆடியும், அழுது புலம்பி ஆனந்தக் கண்ணீர் வடித்தும் ஆடினார்கள். ஒவ்வொருவரையும் நாலைந்து பேர் பிடித்தும் கூட நிறுத்த முடியவில்லை. இறுதியில் பத்துப் பதினைந்து பேர்கள் சேர்ந்து முயன்றுதான் அருள்வெள்ளத்தில் ஆடிச் சென்றவர்களின் தலையிலிருந்து திருக்குடத்தை இறக்க முடிந்தது. திருக்குடம் இறக்கப் பெற்றும் சிலர் சுயநினைவு பெறப் பல மணி நேரம் ஆயிற்று.

இதே நிலைதான் கங்கைக்கரையில் இராமகிருட்டிணப் பரமஅம்சரால் அவரது அடியார் விவேகாநந்தருக்குக் கடவுளை உணரும் பொருட்டு "அருட்பெருஞ் சுடர்" [The Divine Light அருட்பெருஞ்சோதி] மயக்க நிலையில் வழங்கப்பட்டு; மீண்டும் அவரை அந்த அருளுலகப் பேரின்ப நிலையிலிருந்து விடுவித்துப் பொருளுலக நிலைக்குக் கொணர்ந்தபோது ஏற்பட்டது. அதாவது அருளுலக அநுபவம் எவரையும் பொருளுலக உணர்வுகள் அனைத்தையும் மறந்து பேரின்ப ஆட்டத்தில் ஈடுபடுத்திடும். இப்பேருண்மையை, இனியாவது அனைவரும் அறிந்தும், பிறர்க்கு அறிவித்தும் நமது அருட்பணி விரிவாக்கத் திட்டம் வெற்றி பெறப் பாடுபடுங்கள்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 30]

அன்புள்ள சேவுகனுக்கு...!

# நமது வளவளர்ச்சியும், செயல் நிலையும்

அன்புச் சேவுக!

நாம் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறந்த வளர்ச்சியினைத் தமிழ் நாடெங்கும் பெற்றிருக்கிறோம். நமது இயக்க நேரடி உறுப்பினர்கள் வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் நன்கு பரவியிருக்கின்றனர். நம்மிடையே கொள்கைத் தெளிவும், குறிக்கோள் பிடிப்பும் உடையவர்கள் எண்ணிக்கையில் நூறின் மடங்குகளாகி விட்டார்கள். நம்மைச் சார்ந்தவர்களின் நிகழ்ச்சிகளில் பத்தின் பலமடங்கினர் இயக்கத்தவர்களாகவே கூடுகின்ற நிலையும் வளர்ந்திட்டது. நமது அ.வி.தி. செயல்வீரர்களின் சுற்றுப்பயணங்கள் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்று வருகின்றன. சற்றும் எதிர்பாராத வகையில் நம்மவர்களில் தயங்கியும், மயங்கியும், தேங்கியும், நாணியும் ஒதுங்கியிருந்தவர்கள் கூட எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராகி விட்டார்கள்.

நாடெங்கும் அ.வி.தி. நிலையங்கள் செயல்பட்டு மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கும் பணியும் வளமுற்றுவிட்டது. நமது அ.வி.தி. செயல்வீரர்கள் நடமாடும் அ.வி.தி. நிலையங்களாக மாறியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து நமது வளர்ச்சி வளமான, வலிமையான வளர்ச்சிதான் என்று எண்ணி பெருமைப்பட வேண்டும் நாம்.

ஆர்வமிக்க பொறுமைமிகு இனிய நண்ப! நமது வளவளர்ச்சி வலிவும் பொலிவும் பெற்றிருந்தாலும் அதனுடைய செயல்நிலை முறையும் நிறையும் (A Systematic Order and a Perfect functioning) பெற்றுத் திகழவில்லை. அதாவது நமது செயல்நிலைகள் புதியபுதிய நிறுவனக் கட்டமைப்புக்களையும், தலைமையின் செயல்திட்டங்களின்படி இயங்குகின்ற நிர்வாக ஒழுங்கினையும் பெற்றிடவில்லை என்பது வருத்தத்தோடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அதாவது இன்றைய நிலையில் பல இலட்சம் மக்களுக்கு மேல் நம்மையும், நமது இயக்கங்களையும், நமது கருகுலம் குருகுலம் திருகுலம் போன்ற நிறுவனங்களையும் நன்கு தெரிந்து புரிந்து வைத்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பேரார்வத்துடன் நமக்குப் பேராதரவை வழங்குபவர்களாகவே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பெரியபெரிய நகரங்கள் முதல் சின்னஞ்சிறு கிராமங்கள், பட்டிதொட்டிகள், களத்துவீடுகள்..... முதலிய எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறார்கள். ஆனால் இவர்களையெல்லாம் ஒன்றுதிரட்டி இயக்கமாக இயங்கச் செய்யும் முறைகள்தான், அதாவது செயல்நிலைகள்தான் வளவளர்ச்சி பெறவில்லை, வலிவு பெறவில்லை, பொலிவு பெறவில்லை. இப் பேருண்மையினைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்படப் புறப்பட்டேயாக வேண்டும் நம்மவர்கள்.

இதற்காகப் பேரன்பு கூர்ந்து தாங்கள் பலருக்கும் அஞ்சல் அனுப்புங்கள். சென்னையில் இ.ம.இ. பயிற்சி மன்றம் பல செயல்திட்டங்களை உருவாக்கிச் செயல்படுவது போல்; அ.வி.தி. தலைமைச் செயலகமான குருகுலத்திலும் பல செயல்திட்டங்களை உருவாக்கியே தீர வேண்டும்.

இ.ம.இ.யின் மக்கள் தொடர்பு அமைப்பாக அ.வி.தி.தான் பேராற்றலுடன் இருக்கிறது. இதற்காக குருகுலத்தில் மாதந்தோறும் நடக்கும் பருவபூசையை அடிப்படையாக கொண்டு மக்களுக்கு அநுபவப் பூர்வமாக, உணர்வுப்பூர்வமாக நமது மெய்யான இந்துமதத்தை வழங்கும் பணி நிகழ்ந்திடல் வேண்டும்.

அதாவது

*‘மெய்யான இந்துமத உணர்ச்சி!,*

*மெய்யான இந்துமத வளவளர்ச்சி!,*

*மெய்யான இந்துமத ஆட்சிமீட்சி!,*

*மெய்யான இந்துக்கள் எனப்படும் மதவாதிகளிடையே ஒற்றுமையுணர்ச்சியின் எழிச்சி!,*

*மத வேறுபாடில்லாமல் மெய்யான இந்துக்கள் உலக அருளாளர்களை வழிபட்டுப் பயனடையும் மத ஒருமைப்பாட்டு உணர்ச்சியின் கிளர்ச்சி வளர்ச்சி!,*

*படிப்பறிவில்லாத பாமரர்களும் மதத் தத்துவங்களையும், மதப் பெரியார்களின் வரலாறுகளையும், தெரிந்து கொள்ளுமாறு செய்யும் கருத்துப் புரட்சியின் செழிச்சி!,*

*எழுதப் படிக்கத் தெரிந்த மக்களிடையே தமிழ் மொழிதான் அருளுலக ஆட்சி மொழி என்ற பேருண்மை விளங்கச் செய்யும் தமிழின விடுதலைப் புரட்சி முயற்சி மறுமலர்ச்சி!,*

*அனைத்து வகையான கலைத் துறைகளிலும் தமிழ்ப் பண்பாட்டு மறுமலர்ச்சி விளைவதற்குரிய இலக்கியப் புரட்சி!.....’*

முதலியவைகள் உருவாவதற்குரிய பயிற்சிகளை வழங்கும் முயற்சிகள் நம்மவர்களால் விரைந்தும் விரிந்தும் மேற்கொள்ளப்பட்டேயாக வேண்டும். இதற்காக நாம் சாதி மத வேறுபாடுகளையெல்லாம்

கடந்து அனைவரையும் அருளை அநுபவப் பொருளாகப் பெற்று நன்மையடையும்படி அழைப்பு விடுக்க வேண்டும். இந்த அழைப்பின் அடிப்படையில் நாம் செலவழிக்கப் போகும் உழைப்பின் அளவைப் பொறுத்துத்தான் நமது விரிந்த, விரைந்த வளவளர்ச்சியினை வடிவமைப்புச் செய்ய முடியும்.

அடக்கத்திலும் அமைதியிலும் அரும்பணியாற்றிடும் சீரிய நண்ப! தாங்கள் எங்குமுள்ள நமது இயக்கத்தவர்களுடனும், நிறுவனங்களைச் சார்ந்தவர்களுடனும் தொடர்ந்து கடலலை போலத் தொடர்பு கொண்டு, அவரவர் அவரவருடைய அறிமுக வட்டாரங்களுக்கு உட்பட்ட மக்களிடமிருந்து தெளிவான முகவரிகளைப் பெற்று மாதாமாதம் ரூபாய் இரண்டு பெற்று பருவ பூசைக்காக அனுப்புமாறு ஏற்பாடு செய்யுங்கள். இதில் ரூபாய் ஒன்று இ.ம.இ. பயிற்சி மன்ற உறுப்பினர் தொகையாகவும், 50 காசு பருவ பூசைச் செலவுக்காகவும், 50 காசு அருளூறு யாகச் சாம்பலை அனுப்பும் அஞ்சல் செலவாகவும் பயன்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும்.

பருவ பூசைக்காக ஒதுக்கப்படும் 50 காசை ஒரே நாளில் (பருவ பூசை நாளில்) ஆடம்பரமாகவோ, ஆரவாரமாகவோ, அளவுக்கு அதிகமாகவோ செலவிட்டு விடக் கூடாது. அதாவது மாதம் முழுவதும் நிகழ்கின்ற குருகுலப் பூசைகளுக்கு இந்தப் பருவ பூசை வசூலைத் திட்டமிட்டு செலவழிக்க வேண்டும். அப்போதுதான் இ.ம.இ. பயிற்சி மன்ற நிறுவனமும், அ.வி.தி. நிறுவனமும் இணைந்து வலிவோடும், பொலிவோடும் செயல்பட முடியும்.

இதற்காக நமது அ.வி.தி. நிறுவனங்களுக்கு வரும் மக்களிடம் அனைத்து வகையான நலிவுகளுக்கும், மெலிவுகளுக்கும்,

பாதிப்புக்களுக்கும் பரிகாரமாக மாதாமாதம் குருகுலத்தில் நடக்கும் பருவ பூசையிலிருந்து அருளூறு யாகச் சாம்பலைப் பெறுவதற்காக ரூபாய் இரண்டு காணிக்கையாகப் பெறும் திட்டத்தைச் செயலாக்குமாறு வேண்டுகோள் அனுப்புங்கள். இதுபோல், நமது அனைத்து அ.வி.தி. செயல்வீரர்களுக்கும் அறிவிப்பு வேண்டுகோள் அனுப்புங்கள். நமது குருகுலத்திற்கு வந்து செல்பவர்களிடம் நமது இந்தச் செயல்திட்டத்தை விளக்கிக் கூறுங்கள்.

எத்தகைய ஏழை எளிய பாட்டாளிப் பாமரர்களாக இருந்தாலும் உடல் நோய்க்கு மருந்து வாங்குவதற்குச் செலவழிப்பது போல, அல்லது உள்ளத்திற்கு விருந்திற்காக திரைப்படம் போன்ற பொழுதுபோக்கிற்குச் செலவழிப்பது போல; அருட்சத்தியினை தங்களது வாழ்விற்கு மருந்தாகவும், விருந்தாகவும் பெற மாதத்திற்கு ரூபாய் இரண்டு செலவழிப்பது மிகமிகச் சாதாரணமான சுலபமான செயலாகும். இத்திட்டத்தின்படி சேருகின்ற மக்கள் அனைவரையும் வரிசை எண் கொடுத்து (Serial No) பேரேட்டில் எழுதுங்கள். மாதாமாதம் 1 + 2 = 3 நகல் எழுதி, அதாவது புதியதாகச் சேருபவர்களின் பெயர் எழுதி, முழு முகவரியையும் எழுதி, பழையவர்களின் வரிசை எண்ணையும் பெயரையும் எழுதி; தலைவர், பொறுப்பாளர், நிறுவனக் குழு மூவருக்கும் அனுப்புங்கள். **குருவாணை**.

**குவலய குருபீடம்**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

[குருதேவர் அறிக்கை: 32]

<u>அன்புள்ள சேவுகனுக்கு...!</u>

# அருளுலகப் பயிற்சி முயற்சி தேர்ச்சி முறை விளக்கம்

அன்புச் சேவுக!

தாத்தாக்களும் ஆத்தாக்களும் அம்மையப்பன்கள் துணையோடு நிகழ்த்துகின்ற திருவிளையாடல்களுக்குக் காலப்போக்கில்தான்; செயல்முறையில் உரிய விளக்கங்கள் பெரிய அளவில் கிடைக்கின்றன. யாம், எந்த நொடியிலும், எதையும் எம் செயல் என்று எண்ணி விடாதிருக்கத் தாத்தாக்களும் ஆத்தாக்களும் எம்முடைய அன்றுட வாழ்வியல் நிகழ்ச்சிகளில் கூடத் தங்களின் விருப்பப்படியே முடிவுகளை வழங்குகிறுர்கள். அதாவது, 'ஊர் கூடி இழுக்கின்ற பெரிய தேருக்குச் சக்கரத்தடியிலேயே அமர்ந்து சிறிய முட்டுக்கட்டை போடுவது அவசியம்' என்பது போல, 'எண்ணற்ற அடியான்களும் அடியார்களும் சேர்ந்து இழுத்துச் செல்லும் எழுந்தருளிகள் அமர்ந்த அழகு செய்யப்பட்ட பெரிய தேராக இருக்கிறது எம்முடைய வாழ்க்கை.'

இந்த வாழ்க்கைத் தேரின் சக்கரங்களுக்கடியிலே தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போடப்பட்டு வருகின்றன. அவை நமது அடியான், அடியாள், அடியார் பயிற்சி முயற்சி தேர்ச்சிகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற தளர்ச்சி நிலைகள், அயர்ச்சி நிலைகள், தேக்க நிலைகள், முடக்க நிலைகள், வீக்க நிலைகள், கட்டுப்பாடற்ற நிலைகள், தோல்வி நிலைகள், நம்பிக்கையற்ற நிலைகள், அவசர ஆத்திர நிலைகள், பேராசை நிலைகள், 'தான்' என்ற அகம்பாவ ஆணவ வீம்பு நிலைகள், அறியாமை நிலைகள், புரியாமை நிலைகள், தெரியாமை நிலைகள், உலகியல் மயக்க நிலைகள், ஒற்றுமையற்ற நிலைகள்,

ஒருமைப்பாடற்ற நிலைகள், நட்புணர்வற்ற நிலைகள், தோழமையுணர்வற்ற நிலைகள், தொண்டுணர்வற்ற நிலைகள், சமாதானப் போக்கற்ற நிலைகள், பிறரோடு ஒத்துப் போகத் தயாராக இல்லாத நிலைகள், பிறருக்கு விட்டுக் கொடுத்துப் போகத் தெரியாத நிலைகள்..... என்று மிகப் பெரிய பட்டியலிட்டுக் காட்டவேண்டிய வடிவங்களாகவே இருக்கின்றன என்பதை வெளிப்படையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம் யாம். ஏனெனில், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அடிப்படையான, உயிர் நாடியான, உள்ளீடான, மக்கள் தொடர்பு நிறுவனமான அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் தலைமைச் செயலாளர் நீ. நீயொருவன் எமது உணர்வு நிலைகளை முழுமையாகப் புரிந்து கொண்டால் போதும்; உன் மூலம் அனைவரும் புரிந்து கொள்வார்கள்.

நண்ப! யாம் இது காறும் தோன்றிய மற்ற அருளாளர்களைப் போல் முயன்றோ அல்லது திடீரென்றோ அருட்சத்தியையோ, சித்தியையோ, முத்தியையோ பெற்றவரல்ல. யாம் முக்காலமும் கடந்து, நிறைந்து, புரிந்து, அண்டபேரண்டங்களின் தொன்மைக்குச் சமமாக விளங்கும் பாரம்பரிய அருட்செல்வங்களைப் பெற்றிருக்கிறோம். **எமது பதினெட்டாண்டு காலப் பயிற்சிகளும், பதினெட்டாண்டு கால முயற்சிகளும், கடலோடி, காடோடி, நாடோடி வாழ்வுகளும்; யாம் பாரம்பரியமாகப் பெற்ற அருட்செல்வங்களை எப்படியெப்படி உலகந் தழுவி வழங்க வேண்டும் என்ற வழிமுறைகளையும், நெறிகளையுமே வழங்கியிருக்கின்றன. யாம், அறிவு விழித்த நிலையிலேயே, உலகியலின் சொந்த பந்தப் பாசங்களோடு இரண்டறக் கலந்த நிலையிலேயே; பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞானச் சூழலிலும் எமது பணிகளை ஆற்றி வருகிறோம்.**

எமக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வெற்றி; விரல் விட்டு எண்ணினாலும் மாளாத அளவுக்கு அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் கிடைத்திருப்பதுதான். இவர்கள், யாம் விரும்பும் தேவையான அளவிற்கு மேலேயே கிடைத்து விட்டார்கள். ஆனால் இவர்களுக்குள் யாம் விரும்புகின்ற தகுதிகளை முழுமையாகப்

பெற்றவர்கள் இன்னும் போதுமான அளவுக்கு எண்ணிக்கையில் உயரவில்லை! உயரவில்லை! உயரவில்லை! உயரவேயில்லை. எனவேதான், யாம், இந்த தன்னிலை விளக்க (Self-criticism) அஞ்சலைத் தீட்டுகிறோம்.

நண்ப! நமது சித்தர் நெறிப்படி எல்லோரும் இல்லற வாழ்வு வாழ்ந்தே தீர வேண்டும். எல்லோருமே சொந்தபந்தப் பாசப் பிணைப்புகளோடுதான் வாழ வேண்டும். இந்த அடிப்படைக் கருத்தில்; யாம், எள்முனையளவு கூட மாற்றத்தை ஏற்படுத்தவில்லை, ஏற்படுத்தவில்லை, ஏற்படுத்தவில்லை. ஆனால், எம்மால் உருவாக்கப்பட்டு வருபவர்களில் சிலர் சொந்தபந்தப் பாசங்களை மறந்தவர்களாகவும், சிலர் துறந்தவர்களாகவும், சிலர் மறுத்தவர்களாகவும், சிலர் வெறுத்தவர்களாகவும், சிலர் ஒதுக்கியவர்களாகவும், சிலர் பதுக்கியவர்களாகவும், சிலர் புதுக்கியவர்களாகவும்..... இப்படிப் பல நிலையில் இருக்கிறார்கள். இதற்கு யாம் எந்த நிலையிலும் காரணகாரியமாகக் கருதப்பட்டு விடக் கூடாது, கருதப்பட்டு விடக் கூடாது, கருதப்பட்டு விடக் கூடாது, கருதப்பட்டு விடவே கூடாது.

ஏனெனில், 'யாம், எக்காரணம் பற்றியும் எவருடைய சாபத்தையும் பெறக் கூடாது, பெறக் கூடாது, பெறக் கூடாது, பெறவே கூடாது. அதாவது, எம்மிடம் வருபவர்கள் அவரவரின் ஊழ்வினைக்கும், வினைக்கும், ஆள்வினைக்கும், சூழ்வினைக்கும், நாள்கோள்மீன் பாதிப்புக்கும் ஏற்பவே மேலே பட்டியலிட்டுக் காட்டியது போல் பலவகையான உறவுநிலைகளையும், துறவுநிலைகளையும் பெற்றிடுகிறார்கள்.' இப் பேருண்மையினை மற்றவர்கள் புரிந்து கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை; நம்மவர்களாவது முழுமையாகவும், முறையாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும் புரிந்து கொண்டேயாக வேண்டும். இல்லாவிட்டால், உலகெங்கும் தோன்றி மறைந்த எண்ணற்ற மதங்களைப் போல, அல்லது அருள் இயக்கங்களைப் போல, அல்லது அருளாளர்களின் சாதனைகளையும் போதனைகளையும் போல; யாமும், எமது சாதனைகளும், போதனைகளும், எம்மால் உருவாக்கப்படும்

நிறுவனக் கட்டமைப்புக்களும், நிர்வாக ஒழுங்கமைப்புகளும் மங்கி மறைந்திட நேரிடும்.

இதற்காகத்தான் யாம், கற்றுத் தேர்ந்த நல்லிளைஞர்களையே மிகுதியாகத் தேர்ந்தெடுத்துத் தயாரித்து வருகிறோம். எனவே, நம்மவர்களின் பயிற்சி நிலைகளையும், முயற்சி நிலைகளையும், தேர்ச்சி நிலைகளையும் ஒரு மின்னல் வேகக் கண்ணோட்ட ஆய்வு (A lightning Research Approach or Review) செய்யும் வண்ணம் இந்த அஞ்சல் எழுதுகிறோம்.

நண்ப! யாம், எமது திறமையால் யாரையும் ஈர்த்ததாக எண்ணவில்லை, எண்ணவில்லை, எண்ணவில்லை, எண்ணவேயில்லை. அதனால்தான் யாம் அரிதில் முயன்று உருவாக்கிய பேராற்றல் மிக்க அருட்கலைஞர்கள்; காட்டாற்று வெள்ளம் போல் கட்டுப்பாடில்லாமலும், பொறுப்பில்லாமலும், எமது சட்டதிட்டக் கட்டுப்பாடுகளின்படி செயல்படாமலும், நிறுவனக் கட்டமைப்புக்களை உருவாக்குவதில் ஆர்வம் காட்டாமலும், நிர்வாக ஒழுங்கமைப்புக்களை விரும்பாமலும் தான்தோன்றிகளாகச் செயல்பட்டு; மிகப் பெரிய தோல்வி நிலைகளையும், தேக்க நிலைகளையும், பயனற்ற நிலைகளையும் உண்டாக்கி விட்டார்கள், உண்டாக்கி விட்டார்கள், உண்டாக்கி விட்டார்கள்.

இப்படிப்பட்டவர்களைத் திருத்துவதற்காக எழுதப்பட்ட நலம் பாராட்டுத் திருவோலைகளும், செயல்விளக்க மடல்களும், கண்டிப்புக் குருவாணை அஞ்சல்களும் ஏறத்தாழப் பயனற்றுப் போய்விட்டன, பயனற்றுப் போய்விட்டன, பயனற்றுப் போய்விட்டன, பயனற்றே போய்விட்டன. ஏனென்றால் யாம், விதந்து வியந்து பாராட்டிப் பூரித்துப் பெருமையடையும் அளவிற்கு மிகப்பெரிய சித்தி நிலைகளைப் பெற்ற சிலர் நம்மிடையே வாழுகிறார்கள். இவர்கள் அனைவருமே தங்களுடைய தகுதிகளை அறியாமலும், குருமொழி கேளாமலும், சட்டதிட்டக் கட்டுப்பாட்டிற்கு உட்படாமலும் செயல்படுவதால்தான்; நமது வளர்ச்சி குடத்துக்குள் ஏற்றி வைத்த விளக்காகவே இருக்கிறது.

இவர்களைத் திருத்துவது எமது கையில் இல்லை! இல்லை! இல்லை! இல்லவேயில்லை!!! எனவே, இவர்களையெல்லாம், இவர்களின் போக்கிலேயே விட்டுவிட்டோம் யாம்.

அடுத்த நிலையில், நம்மவர்களுக்கிடையில் படித்துப் பட்டம் பெற்றவர் - பட்டம் பெருதவர், வேலை பார்த்துச் சம்பாதிப்பவர் - சம்பாதிக்காதவர், பணக்காரர் - ஏழை, செல்வாக்கான குடும்பத்தவர் - சாதாரண குடும்பத்தவர், உயர் சாதிக்காரர் - தாழ்ந்த சாதிக்காரர் என்ற வேறுபாடுகளும், மாறுபாடுகளும், முரண்பாடுகளும், போட்டி பொருமைகளும் பேய்க் காற்றுப் போல் தலைவிரித்தாடுகின்றன. இவற்ருல்தான், உலகாண்ட தமிழினம் இருந்த இடம் தெரியாமல் இருக்கிறது; உலகாண்ட மெய்யான இந்து மதம் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவிற்குச் சிதைந்து சீர்குலைந்து எண்ணற்ற கற்பனை வடிவங்களைப் பெற்றுக் கிடக்கிறது; அண்டபேரண்டமாளும் அருளுலகத் தமிழ்மொழி தனது மக்களாலேயே இழிக்கப்பட்டும், பழிக்கப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும், அடிமையாக்கப்பட்டும் அனுதை நிலையில் நாதியற்றுக் கிடக்கிறது.

இவற்றிற்கெல்லாம் பரிகாரமாகத்தான், அருளுலக அரியணையில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடமாக அறிவு விழித்த நிலையில் திருவோலக்கத்திலும் நாளோலக்கத்திலும் அமர்ந்து அருளாட்சி நடத்தி வருகிருேம் யாம். அதாவது யாம், இலைமறைகாயாகவே இருந்து கொண்டு, எம்மால் உருவாக்கப்படுபவர்களின் மூலமே உலகைச் சந்தித்துச் செயல்பட்டு வருகிருேம்.

*(தொடர்ச்சி அடுத்த அறிக்கையில்)*

**[குருதேவர் அறிக்கை: 33]**

அன்புச் சேவுக!

அனுதிகாலத்து, விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதனுக்கு, விண்வெளியிலிருந்து வந்திட்ட பதினெண்சித்தர்கள் ஆரம்பக் கட்டத்தில் வழங்கிய அதே பயிற்சிகளையும், முயற்சிகளையுமே

வழங்குகிறோம் யாம். அதாவது எதையுமே அநாகரீகமானது, உலகியலுக்கு அப்பாற்பட்டது, அச்ச கூச்ச மாச்சரியங்கள் உள்ளது, கடுமையானது, கொடுமையானது ...... என்று மறைத்தோ, குறைத்தோ, அஞ்சியோ, கெஞ்சியோ செயல்படுத்தாமல்; ஏறத்தாழ அனைத்தையுமே பச்சையாகவும், கொச்சையாகவும் செயல்படுத்தி வருகிறோம் யாம். இதனால் விளைகின்ற நலிவு மெலிவுகளைப் பற்றியோ, சிதைவு இழப்புக்களைப் பற்றியோ கவலைப்படாமல் இதுவரை செயல்பட்டு வருகிறோம் யாம். எனவேதான், எம்மிடம் ஒரு நொடிப்பொழுது பழகிவிட்டுப் பிரிந்தவர்களானாலும் சரி; அவர்கள் எம்மை மறக்கவோ, துறக்கவோ முடியாதவர்களாகவே வாழுகின்றார்கள் என்ற சாதனையைச் சாதித்திருக்கிறோம் யாம்.

நண்ப! நம்மவர்களில் சிலர் யாம் அதிகமாகச் சித்துவேலைகளையும், அற்புதங்களையும், மாயங்களையும் செய்தால்தான் நமக்கு விரைந்த, விரிந்த வளர்ச்சி ஏற்பட முடியும் என்று நம்புகிறார்கள். **அப்படிப்பட்ட வளர்ச்சி விரைவில் தோன்றி அழியும் காளானின் வளர்ச்சியைப் போன்றதேயாகும்**. மேலும் இயற்கை கடந்த செயல்களைக் கண்டு வியந்து நமக்குச் சேருகின்ற கூட்டம் புற்றீசல்களைப் போல் அல்லது பட்டாம்பூச்சிகளைப் போல விரைவில் செயல் ஒடுங்கிப் போய்விடும்.

இக்கருத்தை, யாம், ஆழமாகவும், வலிமையாகவும் எடுத்துரைப்பதற்குக் காரணம் பதினெண்சித்தர்களின் தலைவரான <u>சிவபெருமான் அறுபத்துநான்கு முறைகள் நேரில் தோன்றித் திருவிளையாடல்கள் புரிந்தும், அறுபத்துமூன்று நாயன்மார்களை அனுப்பி அற்புதங்களையும், மாயங்களையும், சித்துக்களையும் செய்து காட்டியும் கூடத் தமிழ் மொழியின் அருளுலக ஆட்சிநிலை நிலைத்து நிற்கவில்லை. மெய்யான இந்துமதம் நிலையான வாழ்வைப் பெறவில்லை</u>. பதினெண்சித்தர்களின் நேரடி வாரிசான தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையும், பற்றும், பாசமும், கட்டுப்பாடும், ஒருமைப்பாடும், உரிமை உணர்வும், பண்பாட்டுப் பெருமித உணர்வும் நிலைகுலையாமல் நிற்க முடியவில்லை.

எனவேதான், யாம் சித்தர்களுக்கே உரிய ‘சித்துக்கள் அனைத்தையும் தனித்தனியே கடந்த நிலையில்’ தொடர்ந்து வாழுகிறோம், வாழுகிறோம், வாழுகிறோம். யாம், இம்மண்ணுலகின் மூலத் தத்துவத்தின், முதல் தத்துவத்தின் பாரம்பரிய நாயகமாகத் தோன்றியிருக்கிறோம். எம்மைப் போல் இன்னும் முப்பத்தாறு (36) பேர்கள் தோன்ற இருக்கிறார்கள். எனவேதான், யாம், கூறுவதைக் கூறுவோம்; செய்வதைச் செய்வோம்; நடப்பது நடக்கட்டும் என்று நிதானமாக, அடக்கமாக, பொறுமையாக, பொறுப்பாகச் செயல்பட்டு வருகிறோம்.

நண்ப! யாம் எந்தத் தனி மனிதரையும் உயர்த்தவோ - தாழ்த்தவோ, ஒதுக்கவோ - பதுக்கவோ, அடக்கவோ - அடக்காமல் விடவோ முற்படவில்லை, முற்படவில்லை, முற்படவில்லை, முற்படவேயில்லை. ஏனென்றால், ‘கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த சொல்லும் நெடுநாட்களுக்கு நிலைத்திருக்க மாட்டா’ என்ற மூதுரையை நம்புகிறவரே யாம். அதாவது யாரும் யாரையும் உயரத்தில் தூக்கி நிறுத்தவோ, அல்லது முதன்மையாக விளம்பரப் படுத்தியோ வளர்த்துவிட முடியாது! வளர்த்துவிட முடியாது! வளர்த்துவிட முடியாது! வளர்த்துவிடவே முடியாது! இதேபோல் யாரும் யாரையும் அடக்கியோ, ஒடுக்கியோ, மறைத்தோ, குறைத்தோ வளருவதைத் தடுத்துவிட முடியாது! தடுத்துவிட முடியாது! தடுத்துவிட முடியாது! தடுத்துவிடவே முடியாது!

எனவே நம்மவர்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும், கையெழுத்துப் பிறதிகளாக இருக்கின்ற எண்ணற்ற கட்டுரைகளையும், அஞ்சல்களையும், நூல்களையும் தேடிப் படித்துத் தங்கள் தங்களின் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்பப் பயிற்சி முயற்சிகளைச் செய்து தேர்ச்சிகளைப் பெறுமாறு வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறோம் யாம்.

**தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார்.**

[குருதேவர் அறிக்கை: 35]

**அன்புள்ள சேவுகனுக்கு...!**

# நமது இயக்கத்தின் தத்துவ வலிமை

அன்புச் சேவுக!

உனக்கு யாமெழுதியுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஞ்சல்கள் நம்மிருவரின் தோழமையையும், நட்பையும் மட்டும் விளக்குவனவாக இல்லை. இவை, வரலாற்று முதன்மையும், சிறப்பும், புகழும் பெறுபவை. இவை இந்தப் புவிப்பரப்பின் அறியாமை, புரியாமை, தெரியாமை, இயலாமை, இல்லாமை, கல்லாமை, பொல்லாமை, மாயை, மயக்கம், குழப்பம், கலக்கம்... முதலிய அனைத்தையும் தெளிவுபடுத்தும் ஒளிப்பெருஞ்சுடராக! அருட்பெருஞ்சோதியாக! கோடைகாலப் பகலவனின் ஒளியாக!..... விளங்குகின்றன. இருந்தும், நம்மவர்களிலேயே பெரும்பாலானவர்கள் தங்களுக்கு விடுக்கப்படும் அஞ்சல்களின் பொருளாழத்தைப் புரிந்து கொள்ளாமல் புலம்புபவர்களாக இருக்கிறார்கள்.

நண்ப! முன்பெல்லாம் தி.க.வில் பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி..... போன்றவர்கள் பொதுக்கூட்டம் பேச வந்தால்; கூட்டத்துக்குப் பல மணி நேரத்துக்கு முன்பிருந்தே கொள்கை விளக்க நூல்கள், உலகப் பேரறிஞர்கள் மாவீரர்கள் புரட்சிக்காரர்கள்..... முதலியோரின் வரலாற்று நூல்கள், தமிழின மன்னர்கள் புலவர்கள் பல்கலை வாணர்கள் முதலியோரின் சாதனைகளையும் போதனைகளையும் விளக்கும் நூல்கள்... முதலியவை கடை விரித்து விற்கப்படும். பொதுக்கூட்டத்தில் பேசுபவர் அனைவருமே பொதுமக்களைத் தங்களது கழக வெளியீடுகள், மலிவு விலையில் கிடைக்கும் புத்தகங்களாகவும்; அரிய பெரிய பயன்மிகு நூல்களாகவும்;

அறியாமை அகற்றும் கதிரொளியாகவும்..... விளக்கி விளம்பரம் செய்து; வாங்கிப் படிக்குமாறு வேண்டுகோள் விடுப்பார்கள்.

ஆனால் இன்றைய நிலையில் எந்தச் சமய சமுதாய அரசியல் கட்சிகளும் துணிவோடு தங்களுடைய கருத்தை, கொள்கையை, குறிக்கோளை..... விளக்கும் நூல்களை அச்சிடுவதும் இல்லை. ஒருவேளை தவிர்க்க முடியாத காரணகாரியங்களால் ஒருசில நூல்களை அச்சிட்டாலும் அவற்றைப் பொதுக்கூட்டங்களில் விளம்பரம் செய்து விற்பதில்லை. அதாவது, அச்சிட்ட நூல்களைப் பெயரளவில் சிலருக்கு வழங்கிவிட்டு மற்றவற்றைத் தாங்களே முடக்கி வைத்திடும் பழக்கத்தைத்தான் பெரும்பாலான அரசியல் கட்சிகள் செய்கின்றன. இப்படியாக ஏறத்தாழ எல்லாக் கட்சியுமே 'தனது கொள்கை இதுதான்'; 'தனது குறிக்கோள்கள் இவைதான்'; 'தனது செயல் சித்தாந்தங்கள் இன்னவைதான்' என்று வெளிப்படையாகவும், நேரடியாகவும், தெளிவாகவும் விளக்கிக் கூற முடியாதவைகளாகவும், இயலாதவைகளாகவுமே இருக்கின்றன.

அதாவது இன்றைய நிலையில் ஏறத்தாழ எந்தக் கட்சிக்குமே கொள்கை கிடையாது! குறிக்கோள் கிடையாது! செயல் சித்தாந்தம் கிடையாது! என்பதுதான் உண்மை. ஆனால், எல்லாக் கட்சிகளிலும் தலைவர்கள் பலராகவும், சிலராகவும் இருக்கின்றனர்கள்; தொண்டர்களும் தேவையான அளவு இருக்கிறார்கள். இதெப்படி முடிகிறது என்றால் 'தனிமனிதச் செல்வாக்கும் புகழுமே கட்சிகளை வளர்க்கின்றன.'

இப்படித் தனிமனிதச் செல்வாக்கினால்தான் கட்சிகள் வளர்க்கப்படுகின்றன என்ற பேருண்மை மத்திய அரசிலும், மாநில அரசிலும் நிலவுகின்றது. எனவேதான் எந்தக் கட்சியும் தொண்டர்கள் எடுக்கும் முடிவின்படி இயங்கவில்லை. அதாவது ஏறத்தாழ எல்லாத் தனிமனிதர்களின் கட்சிகளுமே சொந்த விருப்பு வெறுப்புக்களாலேயே

நிகழும் கட்சியாகத்தான் இருக்க நேரிடுகிறது; இயங்குகின்றனவாகவே இருக்கின்றன.

எனவே எந்தக் கட்சியாலும் நம் நாட்டு மக்களுக்கு நிலையான நன்மைகள் திட்டவட்டமாக உருவாக்கிட முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! எனவேதான் தத்துவத்தையோ, தொண்டர்களையோ நம்பாமல் சில தனிமனிதர்களே நம் நாட்டுக் கட்சிகளை நடத்துகின்றார்கள். அதாவது நமது நாட்டுக் கட்சிகள் அனைத்துமே 'தனிமனிதச் சொத்துக்களாகவோ' அல்லது 'ஒரு சிலரின் கூட்டுச் சொத்தாகவோ'தான் இயங்குகின்றன. எனவேதான், நம் நாட்டு மக்களின் நலனுக்காக எந்தக் கட்சியும் இல்லை என்பதைப் புரிந்த நம் நாட்டு மக்கள்; எந்தக் கட்சியிடத்தும் நம்பிக்கையோ! ஆர்வமோ வளர்த்துக் கொள்ளாமல் ஏனோதானோ என்று வாழுகிறார்கள்.

இந்த அவலக் கேவல நிலைகளைப் புரிந்து நமது இயக்கத்தவர்கள் அதிக அக்கரையுடனும் ஆர்வத்துடனும் செயல்பட்டு நமது இயக்கத்தைப் பொது மேடைப் பேச்சுகளின் மூலமும்; அச்சிட்ட புத்தகங்கள், அறிக்கைகள்..... முதலியவைகளின் மூலமும் வளர்க்கப் பாடுபட வேண்டும்! பாடுபட வேண்டும்! பாடுபட வேண்டும்! பாடுபட்டேயாக வேண்டும்! இல்லாவிட்டால், நமது வருங்காலச் சந்ததியார் தமது இருண்ட, இன்னல்மிகு வாழ்க்கைக்குக் காரணமாக இருந்தவர்களின் பட்டியலில் நம்மையும் சேர்த்து வசை பாடிடுவார்கள்! வசை பாடிடுவார்கள்! வசை பாடிடுவார்கள்! இதனை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்பட முற்படுங்கள்.

நண்ப! நாம் மாதாமாதம் (ரூ1.00) ரூபாய் ஒன்று விலையில் வெளியிட்டு வரும் குருதேவர் அறிக்கைகள் முப்பத்து மூன்றும்; நாம் வெளியிட்டுள்ள ஏழெட்டுப் புத்தகங்களும் மட்டுமே போதும் நமக்கு. இவற்றை வைத்துக் கொண்டே; நாம், நமது வரலாற்றுப்

பின்னணி, இலக்கியச் சான்று, கொள்கை வளம், குறிக்கோள் வலிமை, செயல்திட்டத் தெளிவு..... முதலியவற்றை உலகம் முழுவதற்கும் விளக்கி உரைத்திடலாம். அதாவது, நமது இயக்கத்துக்கென்று வரலாற்று உரிமையும், இலக்கியப் பெருமையும், தத்துவப் பாரம்பரியமும், செயல்சித்தாந்தச் செழுமையும்..... மிகமிகத் தெளிவாகவும், முறையாகவும், நிறையாகவும்... இருப்பதைச் சுட்டிக்காட்டி விளக்கி உரைத்தே வானுற வளர்ந்திடலாம் நாம்.

ஆனால், நம்மவர்களில் முன்னணியில் உள்ள பலர்; நமது இயக்கத்தைத் தங்களின் பொழுதுபோக்குச் சாதனமாகவே பயன்படுத்துகிறார்கள், அதாவது 'பாம்பும் சாகக் கூடாது; பாம்பை அடிக்கும் கம்பும் கையும் நோகக் கூடாது' என்ற பழமொழிப் படியே பலர் நமது இயக்கப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆனால் இவர்கள் எல்லோருமே நல்லவர்கள்தான்! நல்லவர்கள்தான்! நல்லவர்கள்தான்! இருந்தாலும், இந்த நல்லவர்கள் பெரும்பாலும் ஏமாளிகளாகவும், சோம்பேறிகளாகவும், அப்பாவிகளாகவும், சுறுசுறுப்பில்லாதவர்களாகவுமே இருக்கின்றார்கள். எனவேதான் இவர்களில் யாரையுமே கண்டிக்க விரும்பவில்லை யாம்..... இது பற்றித் தாங்களே நம்மவர்களோடு சிந்தியுங்கள்...

நண்ப! பொறுப்பை உணர்ந்தவர்கள் கூடப் பொழுது போக்கும் சாதாரணமானவர்களாக மாறி வரும் நிலை நமது இயக்கத்துள்ளும் வளருகிறது. எனவே, நாம் தனிமனிதர்களை நம்பிப் பயனில்லை. நாம் நமது தத்துவத்தை நம்பித்தான் செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டேயாக வேண்டும்! அதாவது கோபுரத்துப் பொம்மைகளுக்கும், கோபுரத்துக்கும் என்ன உறவு என்பதை விளக்கி உரைக்க வேண்டிய காலக்கட்டத்துக்கு வந்துவிட்டோம் நாம்.

எனவே, நாம் மீண்டும் எழுதுகோலேயும் தாளேயும் (பேஞவையும் பேப்பரையும்) மட்டுமே நம்பி நமது பணிகளே தொடருவோம். நாம் எதிர்பார்க்கும் நாளும் ஆளும் நமக்குக் கிடைக்கும் வரை விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் ஆங்காங்கே அருட்கணிப்புக் கூறியும், அருள் வழங்கியும், அருளுரையாற்றியும் செயல்பட்டிட்டாலே போதும்! போதும்! போதும்! ஏனெனில், யாம், யாரையும் அடிக்கடி தொந்தரவு செய்து இயக்கப் பணிகளில் ஈடுபடுமாறும், இயக்கம் வளர்க்க இயன்ற உதவிகளேத் தருமாறும்... ... கேட்டுக் கொண்டே இருக்க இயலாது! அதாவது அவரவராக மனம் விரும்பி ஆற்றக் கூடிய பணிகளேயும், தரக்கூடிய ஆதரவுகளேயும், உதவிகளேயும் பெற்றுச் செயல்பட்டால் போதும் நாம்.

எனவே, விரைவில் வில்லுப்பாட்டு, நாடகம், கலே நிகழ்ச்சி..... முதலியவைகளேத் தயாரிக்கும் பணியில் ஈடுபடப் போகிருேம் யாம். அது கண்டு "நமது குருதேவரா இப்படியெல்லாம் இறங்கிச் செயல்படுகிருர்....." என்று வருந்தத் தேவையில்லே. ஏனெனில், **'நல்லவர்கள் நிீனப்பது மட்டும் நடப்பதே இல்லே நம் நாட்டில்'** என்ற குருபாரம்பரிய வாசகம் மெய்யாகி வருகிறது. எமக்கும் தோல்வி ஏற்பட்டிடுமோ?!?!..... என்று எண்ணுகிருேம்..... ஒதுங்குவோரும் பதுங்குவோரும் பலராவதை உணர்க.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூருர்**

[குருதேவர் அறிக்கை: 36]

<u>அன்புள்ள சேவுகனுக்கு...!!!</u>

# நமது தேக்க நிலைக்குக் காரணம் நம்மவர்களின் பக்குவமின்மையா?!

# ‘இலக்காட்சியினரின் தோல்விக்குக் காரணம் குருவழிச் செயல்படாமையே’

அன்புச் சேவுக!

உலகியலுக்குத் தெரிந்த வரலாற்றுப்படி இலக்காட்சியினர் (இலக்கு + ஆட்சியாளர் => இலட்சியவாதிகள், *சமசுகிருதத்தில்*) கடுமையான சோதனைகளையும், கொடுமையான செயல்களைச் செய்ய வேண்டிய இன்றியமையாத நிலைகளையும் அடைந்து வந்திருக்கிறார்கள் என்பதே உண்மை. அப்படியல்லாமல், எதிர்பாராமல் எளிமையாகப் புகழும், பதவியும், பொருளும் ஈட்டியவர்கள் மெய்யான சாதனைகளைச் சாதித்தவர்களாக மாட்டார்கள். மேலும், இவர்களுடைய சாதனைகள் நிலைத்த வடிவையோ, வாழ்வையோ, பயனையோ நல்கியவையானதில்லை.

நாம், சிவன், திருமால், பிறமண்..... முதலியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை விஞ்ஞான நோக்கிலும், பகுத்தறிவுப் போக்கிலும் விளக்கியுரைக்கும் மாபெரும் கருத்துப் புரட்சியின் மூலம்தான் படிப்படியாகச் சமயம், சமுதாயம், அரசியல் மறுமலர்ச்சிகளை விளைவிக்க முடியும். அதனால் நமது எல்லை சமயம்தானா?!..... அல்லது இது கடந்து சமுதாயம், அரசியல்..... என்ற எல்லா

எல்லைகளுக்கும் செல்ல வேண்டுமா? என்பதைச் சிந்தித்து விவாதித்து முடிவெடுக்க வேண்டும் நாம்.

முருகன் பாலகப் பருவம் கடக்கும் முன்னரே தாய்தந்தையரின் போக்கை விமர்சித்துத் தன் போக்கில் முடிவெடுத்து அதனைச் செயலாக்கினான் என்பதையும்; இராமன் தன் மனைவி என்ற பந்த பாசங்களைக் கடந்து சீதையை நெருப்பில் நீராடவும், கொலைத் தண்டனைக்குரியவளாக்கிடவும் முற்பட்டான் என்பதையும்; கண்ணன் ஒரு பக்கமும் சார்பின்றிச் சமாதானத்துக்காகப் பஞ்ச பாண்டவர்களுக்காக ஐந்து வீடுகளாவது கேட்டும் தோல்வி கண்டதால் அனைவரையும் அழித்தொழிக்கப் பாரதப் போர் நிகழ்த்தினான் என்பதையும்; மகாவீரர், புத்தர், ஏசு, நபி நாயகம், காலடி ஆதிசங்கரர், அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரண்டு ஆழ்வார்கள், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர், சீர்காழி வள்ளல், சந்தானச்சாரியார்கள், இராமலிங்கர்,...... முதலியோர் அனைவருமே மிகுந்த மன வலிமையோடும், சிந்தைத் துணிவோடும், சொந்தபந்தப் பாசங்களைப் போரிட்டு முறியடித்து வென்றுதான் புதிய சாதனைகளைச் சாதித்திருக்கிறார்கள் என்பதையும்; நம்மவர்கள் முறையாகவும் நிறையாகவும் தெரிந்து ஆராய்ந்து புரிந்து கொள்ள முடியாத காரணத்தால்தான் நமது நிலைகளில் தேக்க நிலைகளும், தொய்வு நிலைகளும், மந்த நிலைகளும் மிகுந்திருக்கின்றன.

அதாவது, இலக்காட்சியினர் சூழ்நிலைகளோடு தீரத்தோடும், வீரத்தோடும் கடுமையாகப் போரிட்டு வெற்றி தோல்வி பற்றிக் கவலையின்றித் தியாகங்களைச் செய்திட்டால்தான் எதையாவது சாதித்தவர்களாகிட முடியும். அப்படிப்பட்டவர்கள் நம்மிடையில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவினராவது உள்ளனரா?

நம்மவர்களில் உலகியலாகப் பணமோ, பதவியோ, செல்வாக்கோ உள்ளவர்கள் தாங்கள்தான் இயக்கத்தையே நடத்துவதாக எண்ணிக்

குருவழிச் செயல்படாமல் செயல்படுவதால் தேவையில்லாத தேக்க தூக்க நிலைகளும், சிதைவுச் சீரழிவு நிலைகளும் உருவாகுகின்றன.

இதேபோல் ஊழ்வினையாலும், விதியாலும், பயிற்சி முயற்சியாலும் ஓரளவு அருட்சத்திகளையும், சித்திகளையும் பெற்றவர்கள் தங்களால் விளைகின்ற அற்ப சொற்பச் சாதனைகளையெல்லாம் எண்ணித் தாங்களே அனைத்தும் என்ற மாயைக்கும், அகம்பாவ ஆணவங்களுக்கும் உள்ளாகிடுகிறார்கள். இதனால் இவர்கள் குருவழிச் செயல்படாமலும்; இந்துமத வரலாற்றுப் பேருண்மைகளை எண்ணிச் செயல்படாமலும்; தங்களால் அருளுலகில் மலர்ச்சியும், வளர்ச்சியும், புதிய தோற்றங்களும், பயன்களும் விளைவதாக எண்ணி இறுமாப்புக் கொண்ட தான்தோன்றிகளாகி விடுகிறார்கள். இருந்தாலும் குருவின் அருள் உள்ளம் அனைவரின் அக இருளையும், புற இருளையும் அகற்றும் பணியில்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டேயாக வேண்டும் நம்மவர்கள்.

பறவையின் குஞ்சுகள் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வருவது போலப் புதியன சாதிக்க விரும்புகிறவன், தன்னைச் சுற்றியுள்ள அனைத்துவிதமான சொந்தபந்தப் பாசக் கட்டுப்பாடுகளையும், மற்ற சமூக சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் முட்டிமோதிப் போரிட்டு உடைத்தெறிந்து விட்டுத் தியாகச் செம்மலாகப் புரட்சி வாழ்வை மேற்கொண்டேயாக வேண்டும். அதற்காகத் தனிமனித வாழ்வில் பழியையும், இழிவையும், அழிவையும், இழப்பையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் வீரதீரப் போரில் விழுப்புண்கள் தாங்கிப் போராட்ட வாழ்வு வாழத் தயாராக இருப்பவனே பக்குவம் பெற்றவனாகக் கருதப்படுகின்றான்.

இத்தகையவனாலேயே ஆக்கச் சாதனைகளுக்குரிய ஊக்க உணர்வையும், தலைவனாகிய குருவழியே செயல்படக்கூடிய தரத்தையும், திறத்தையும் பெற்றிட முடியும், பெற்றிட முடியும், பெற்றிட

முடியும். இந்த நிலையினைப் பெற்றவர்கள் நம்மில் எத்தனை பேர்? எத்தனை பேர்? எத்தனை பேர்? -- என்று நடுநிலையில் நின்று சிந்தித்தால்; '<u>நமக்குத் தோல்வி நம்மவர்களாலேயே!</u>' '<u>நமது தேய்நிலைகளுக்கும் ஓய்நிலைகளுக்கும் காரணம் நம்மவர்களின் ஓயாத மாயாநிலைகளே காரணம்</u>' என்பது விளங்கிடும். அதாவது, நம்மவர்களுக்கிடையில் தன்னையறிந்தோ அல்லது தலைவனைப் புரிந்தோ செயல்படாது, தான்தோன்றித் தனமாகச் செயல்படுபவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதன் காரணமாகத்தான் அனைத்து வகையான தூக்க, தேக்க, முடக்க நிலைகளும் வளர்ந்து வருகின்றன. இனியும் இது கூடாது.

இந்த 1986-ஆம் ஆண்டு டிசம்பர் மாத குருதேவர் அறிக்கையோடு 36 புத்தகங்களில் நமது கொள்கை விளக்கம் வரலாற்றுப் பூர்வமாக இலக்கியச் சான்றுகளோடும், தத்துவ ஊன்றுகளோடும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளைக் கடந்து பருவமடைந்து பக்குவப்பட்டு விட்டது. எனவே நம்மவர்கள் இந்த 36 அறிக்கைகளையும் மாதமொருமுறை முழுமையாகத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டு விட்டால் போதும்; பாடி வீடுகளும் பாசறைகளும் முழுமை பெற்றுவிடும்.

**அன்பு**

**குவலய குரு பீடம், அருளாட்சி நாயகம்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

[குருதேவர் அறிக்கை: 37]

<u>**அன்புள்ள சேவுகனுக்கு...**</u>

# <u>ஊசலாட்டம்</u>

# <u>இந்து மறுமலர்ச்சி இயக்க ஊக்கம் தேயுமா! ஓயுமா! மாயுமா!</u>

அன்புச் சேவுக!

நாம் ஒரு பண்பாட்டுப் புரட்சி இயக்கம்! நமக்கெனப் பழம்பெரும் வரலாறு, இலக்கியம், தத்துவம், வாழ்வியல் நெறிமுறை...... முதலியவை உண்டு. ஆனால், கண்மூடிப் பழக்கவழக்கங்களாலும், மூட நம்பிக்கைகளாலும், தவறான தலைமைகளாலும், இனப்பற்று மொழிப்பற்று இல்லாமையாலும், இனஒற்றுமையும் ஒருமைப்பாடும் இல்லாததாலுமே...... அனைத்தும் மண்மூடிப் போயின. எனவே, **நாம் இருளுக்குள் இருக்கிறோம்; நமக்குள் இருள் இருக்கக் கூடாது**.

நண்ப! நூற்றுக்கணக்கான முறை உறுதிமொழி வழங்கிக் குருவையே தாயாக, தந்தையாக, தெய்வமாக, வாழ்வாக ஏற்பவர்களைக் கொண்டுதான் அருட்படை உருவாக்கப்படல் வேண்டும். ஆனால், நம் நாட்டில் படித்த இளைஞர்களில் அலுவலக உழைப்பாளிகளான அறிவியல் சீவிகள் என்றும்; விவசாயம், தொழில், வாணிகம், கலை..... என்று உடலுழைப்பாளிகளான செயல் சீவிகள் என்றும் இருபெரும் பிரிவுகள் உள்ளன. இவற்றை இணைத்தேயாக வேண்டும்.

நமது அறிவியல் சீவிகள்தான் அனைத்து வகையான இயக்க நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி முன்னின்று வழிகாட்டி நடத்த

வேண்டும். ஆனால் ஊசலாட்டமும், திசைதிருப்பலும், திருத்தல்வாதமும், ஒதுங்கலும், பதுங்கலும்..... எப்படியோ நமது அறிவியல் சீவிகளிடம் ஆங்காங்கே முளைவிட்டுக் கிளைத்துள்ளன. இவை செழித்து வளருமுன் தத்துவ விளக்கம், கொள்கை விளக்கம், செயல்திட்ட விளக்கம், குறிக்கோள் நோக்கம்...... முதலியவைகளைப் பணியாளர்களாக நியமித்து இத்தவறான களைகளைப் பயிரிலேயே வேருடன் பறித்தெடுக்க வேண்டும். இதற்குத் துணிவும், நேர்மையும், நடுநிலையும், பொறுமையும், பொறுப்பும், உரமும், தரமும், திரமும், திறமும், தீரமும், வீரமும் உடைய பல செயல்கள் ஏட்டளவிலும் செயலளவிலும் வழங்கப்படல் வேண்டும்.

நண்ப! யாம் யாரையும் குறைகூற முயலவில்லை. ஆனால், நம்மவர்களுக்கிடையே சினிமாவும், சீமைச்சாராயமும், சிகரெட்டும்..... ஆட்சிபுரிந்து அனைத்தையும் மறந்து செயல்படக் கூடியவர்களை உருவாக்கும் நிலை வளர்ந்து விடக்கூடாது. அதற்கு இதுகாறும் வெளிவந்துள்ள முப்பத்தைந்து (35) குருதேவர் மாத அறிக்கைகளையும்; ஓர் ஆண்டு மலரையும், ஏழெட்டுத் தனிநூல்களையும் திருப்பித் திருப்பிப் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளுமாறு அனைவருக்கும் அறிவுரை வழங்க வேண்டும். இதனை, நமது அறிவியல் சீவிகளுக்குச் சட்டமாக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் மயக்கம், தயக்கம், பேதளிப்பு, ஊசலாட்டம் முதலியவை அகன்றிடும். நம்மிடம் வளமான, வலிவான கொள்கை இருக்கிறது; தெளிவான, திட்டவட்டமான குறிக்கோளும் இருக்கிறது; மிக எளிய செயல்திட்டங்களும் இருக்கின்றன என்ற பேருண்மை அவர்களுக்குப் புரியும்.

நண்ப! தலைமையை முழுமையாக ஏற்றுத் தலைமைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு எந்த ஆணையையும் ஏற்றுச் செயல்படுத்தும் வீரர்களாக அறிவியல் சீவிகளை உருவாக்க இயலாது என்ற நிலை நாளுக்குநாள்

தெளிவாகிறது. மேலும் நகர நாகரிகமும், மேம்போக்கான வாழ்வும் அறிவியல் சீவிகளைக் கோழைகளாகவும், குழப்பவாதிகளாகவும், குறுகிய போக்குடையவராகவும் ஆக்கியுள்ளன. எனவே, நாம், அதிகப் படிப்பில்லாதவர்களையும், உடலுழைப்புப் பாட்டாளிகளையும் நம்பித்தான் அருட்படை திரட்ட வேண்டும். இதற்கு அருட்பணி விரிவாக்கத் திட்டம்தான் உரிய உயர்ந்த வழி.

அன்பு நண்ப! அ.வி.தி. நிலையங்களை நாடெங்கும் தோற்றுவிக்க வேண்டும்; அ.வி.தி. செயல்வீரர்களை உருவாக்கும் பணியிலேயே முழுக் கருத்தையும் கவனத்தையும் செலவிட வேண்டும். இ.ம.இ.யின் மூலம் உருவாகும் கொள்கைவாதிகள் குடிகாரர்கள் போல் திடீர்திடீரென்று திசை மாறவும், திருத்தல்வாதம் போதிக்கவும் ஆரம்பித்திடும் நிலையை வளர்க்கக் கூடாது. 'செய் அல்லது செத்து மடி' [Do or Die] என்ற ஆணைக்கு அடிபணியும் வீர மனம் அ.வி.தி.யால்தான் உருவாகும்.

நம்மவர்கள் கட்டாயமாக அன்றுடப் பூசை, வார பூசை (வியாழன், ஞாயிறு), மாதப் பருவப் பூசை, அமாவாசை வேள்வி முதலியவைகளைக் கட்டாயமாகப் பயிற்சியாக்க வேண்டும். இல்லாவிட்டால் அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசின் வீழ்ச்சியே நமக்கும் ஏற்படும். எனவே, யாம் நாளோலக்கத்திலிருந்தும், திருவோலக்கத்திலிருந்தும் விடுக்கும் இந்த அருளாட்சி ஆணையின்படி நமது சன்னிதானங்கள் மட்டுமாவது முழுமையான அ.வி.தி. செயல்வீரராவதற்கு மேற்குறித்த பயிற்சி நிலையைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். இதற்குரிய விளக்க ஆணைகளைத் திருவோலை நாயகமாகிய தாங்கள் உடனே எங்கும் அனுப்புமாறு குருவாணை வழங்குகிறோம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# அருட்பணி விரிவாக்கத் திட்டம்

**வைகாசிப் பருவ பூசை விழா;**
**உண்மையான இந்துமத ஞானம் வழங்கு திருவிழா;**
**இந்து மறுமலர்ச்சி விழா; தமிழ் கூறும் நல்லுலக விழா;**
**அருள்நெறியாளர்கள் எழுச்சி விழா; ஆத்தாளை அழைத்துப் பூசிக்கும் விழா;**
**சமுதாயப் புரட்சி விழா; பண்பாட்டு வளர்ச்சி விழா;**
**கண்டவர் விண்டிடும் விழா; விண்டதைப் பிறர் காணச் செய்திடும் விழா;**
**அகவிருள் அகற்றும் விழா; புறவிருள் போக்கும் விழா;**
**நாட்டுக்கு நலமளிக்கும் விழா; மதங்களை இணைத்திடும் விழா;**
**அருளாட்சி அறிவிப்பு விழா; அருளாட்சி அமைப்பு விழா;**

# அருளாட்சி அழைப்பு விழா

பதினெண்சித்தர்கள் மணீசர்களை [மண் + ஈசர் = மண்ணுலக உயிரினங்களின் தலைவர்கள்] மேம்படுத்திப் பண்பாடும் நாகரிகமும் பெற்று மனிதர்களாக்கிடத் [மனதை உடையவர் = அகப்பண்பாடு + புறநாகரிகம்] தங்களுடைய விண்வெளி மதமான இந்து மதத்தைத் தங்களின் தாய்மொழியான தமிழில் வழங்கினார்கள். அம்மதம் கிரேதாயுகம் 17,28,000 ஆண்டுகள் + திரேதாயுகம் 12,96,000 ஆண்டுகள் + துவாபரயுகம் 8,64,000 ஆண்டுகள் + கலியுகம் 5,118 ஆண்டுகள் [2017ஆம் ஆண்டில்] ... என்று வாழ்ந்து வளர்ந்து மானுடரைக் காத்து வந்திருக்கிறது.

இவ்வளவு பெரிய, நெடிய, நீண்ட... இடைவெளிக் காலத்தில் மனித மறதியால், கற்பனையால், கனவால், சூழ்ச்சியால், தன்னலத்தால், வெறியால், ... சில தேவையற்ற, பயனற்ற மடமைகள் இந்துமதத்தில் தோன்றிவிட்டன. அவற்றையும் அகற்றித் தூய்மைப்படுத்தி இந்து மதத்தை உலக மானுடர் உய்வுநெறியாக ஆக்கும் பணியை பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் துவக்கியுள்ளார்கள். இவருக்கு முன் பதினோரு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இப்பணியை அவ்வக்காலங்களுக்கேற்பச் செய்துள்ளனர்.

இவருக்குப் பின் தேவைக்கேற்ப முப்பத்தாறு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி, அவ்வக்காலங்களுக்கேற்ற மறுமலர்ச்சிப் பணிகளைச் செய்வர். எனவே, மானுட இனம் இம்மண்ணுலகில் வாழப் போகும் கலியுக முடிவு வரை 4,26,882 ஆண்டுக் காலம் முழுவதும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் இந்து மதம் தொடர்ந்து புதுப்பிக்கப் பட்டு, மறுமலர்ச்சி செய்யப்பட்டு, மானுடரை உய்வு படுத்தும் நெறியாகவே இருக்கும்.

மதவழியே இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் மித இத வழி.
இந்து மதமே தமிழின மொழி நாட்டுப்பற்றைச் செயல்நிலைப் படுத்தும்.
மனிசர்களை மனிதர்களாக்கும் சித்தர் நெறியே உண்மையான இந்துமதம்.
காயந்திரி மந்தரத்தால் தன்னையறிந்து தலைவனைத் தெரியலாம்.
கலசப்பூசையால் தலைவனையறிந்து தன்னைத் தெரியலாம்.
குண்டலினிப் பயிற்சியால் குருவையறிந்து திருவைப் புரியலாம்.
பிருணாயாமத்தால் பிண்டம் அண்டம் அறிந்து வெல்லலாம்.

***- குருவாக்கு***

ஊனநிலை ஒழித்து மெய்ஞ்ஞான நிலை பெற்றிடவே
கானகமும் வானகமும் வாழக் கற்றிடு குருவிடமே!
ஆனதற்கும் போனதற்கும் புலம்பிடாதே! - ***குருபாரம்பரியம்***

இந்து மதத்தின் மறுமலர்ச்சியே மானுடச் செழுச்சி!
இந்து மதச் செழுச்சியே உலகப் பொதுவுடமை வளர்ச்சி!
இந்து மத உயர்ச்சி உலகச் சமத்துவ ஆட்சி!
இந்து மத உணர்ச்சி இன விடுதலை மீட்சி!
இந்து மதப் பயிற்சி சுரண்டுவோர் சூழ்ச்சிக்கு வீழ்ச்சி!
இந்து மதமே உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டைத் தரும்!
இந்து மதமே அனைத்தையும் கடவுளாக்கும் ஆற்றலுடையது!
இந்து மதமே உலகச் சமூக விஞ்ஞானம்!
இந்து மதமே பகுத்தறிவின் தாய்!
இந்து மதமே தன்னையும் பின்னையும் முன்னையும் உணர்த்தும்!

**இந்து மறுமலர்ச்சி இயக்கம் அருட்பணி விரிவாக்கத் திட்டம்**
**கடவுளை வழிபடுவோர் கழகம் அருளுலக ஆர்வலர் கழகம்**
**உலக அருளாளர் திருச்சபை உலக மத ஆய்வுக் குழு**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல். அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். இவர் நல்ல ஆராய்ச்சிப் போக்கும், காலக் கணக்கீட்டு நோக்கும், வரலாற்றறிவும், இலக்கியக் கருத்துமுடைய சிறந்த நடுநிலைப் பேரறிஞராக வாழ்ந்து செயல்பட்டுள்ளார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
Email: indhuism@gmail.com
www.induism.org www.books.gurudevar.org